மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட ஆலோசனைகள் எதுவும் இப்போது இந்த அரசிடம் இல்லை. ஆகவே இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, இந்த ஷெல்லர் டைப் பொருத்துவதால் எந்தவிதமான பயனும் இல்லை என்று விவரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட சட்டங்கள் வருகின்ற போது சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்றவர்கள் மேலே வரமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கொஞ்சம் முன்னேறி வருகின்ற சமயம் இந்த மாதிரி சட்டங்கள் வந்து அவர்களது முன்னேற்றத்தை தடை செய்கிறது. ஆகவே இந்த மாதிரி நிலையினை அரசு அறிந்து, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்றவர்கள் வளர்வதற்கேற்ற வகையிலே, இந்த மாதிரி ஷெல்லர் டைப் எல்லாம் தேவையில்லை என்று அரசு போராடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அரசு போராட வேண்டிய அவசியம் இல்லை, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்ன உபதேசத்தை டெல்லியிலே நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் மூலமாக எடுத்துக் சொல்வதற்க ஏற்பாடு செய்தால் பொருத்தமாக இருக்கும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூரில் கூடுதல் துணை நீதிமன்றம்

* வினா எண் 282 — திரு. ரா. மார்க்கபந்து ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வடாற்காடு ஜில்லா வேலூரில் உள்ள இரண்டு சப்-கோர்ட்டுகளில் அதிக வழக்குகள் தேங்கி நிற்பதால் அங்கு ஒரு கூடுதல் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

The Hon. Thiru K. NARAYANASWAMY : The constitution of a Second Additi Sub-Court at Vellore was sanctioned in G. O. Ms. No. 2921, Home, dt. 28-11-78 and the above court started functioning from 19-1-79 F. N.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், இவ்வாறு இரண்டாவது அடிஷனல் சப் கோர்ட் ஆரம்பிப்ப... மேலும் சில இடங்களிலே அதிக வழக்குகள் தேங்கி இருப்பதன் காரணத்தால் தான் இந்தக் கேள்வியினைப் போட்டேன். ஆகவே

1979 மார்ச் 8] [திரு. ரா. மார்க்கபந்து]

அந்த முறையிலே தாலுக்கா வாரியாக மாஜிஸ்ட்ரேட் கம் முன்சீப் என்கிற முறையிலே, அதாவது இன்டெக்கிரேஷன் ஆப் கோர்ட்ஸ் என்ற முறையிலே இந்த அரசினுடைய நிலைமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்டெக்ரேஷன் ஆப் கோர்ட்ஸ் அல்லது இன்டெக்ரேஷன் ஆப் சர்வீசஸ் என்ற முறையிலே இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள விரும்புகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் தமிழகத்திலே நான்கு இடங்களிலே இது போன்ற மாஜிஸ்ட்ரேட் கம் முன்சீப் என்ற அளவிலே ஃபங்ஷன் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை ஒட்டி கேளுங்கள். மேலும் நான்கு இடங்களிலே இப்படி இருக்கிறது என்றெல்லாம் பேசவேண்டாம். கேள்வியைச் சுருக்கமாகப் போடவேண்டும்.

THIRU R. MARGABANDHU: This is for reducing the pendency என்ற முறையிலே அவ்வாறு நான்கு இடங்களில் சிறப்பாகச் செயல்பட்டு வருவதைப் போல மற்ற இடங்களிலும் இதனை அமல் படுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : These three supplementary questions do not flow from the main question.

திரு. எஸ். ஜே. இராமசாமி : வேலூரில் அதிகமாக சப் கோர்ட்டை விரிவு படுத்துவது பற்றி, அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதற்காக நன்றி. வெள்ளைக்காரன் காலத்தில் வரையறுக்கப்பட்ட எல்லைகள்தான் இப்போதும் இருக்கின்றன. ஆகவே அதை மாற்றி அமைத்து இப்போதுள்ள நிலைமைக்கு ஏற்ப எல்லைகளை பிரித்தமைத்து வழக்குகளை குறைந்த அளவு எண்ணிக்கையில் வைப்பதற்கு அரசு முன்வருமா ? அதிகப்படியான கோர்ட்டுகளை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, வேலூரில் கூடுதல் துணை நீதிமன்றம் அமைப்பது பற்றியது. அதை விட்டு வேறு கேள்வி போட்டால் எப்படி பதில் கிடைக்கும்? ஆகவே மூலக் கேள்வியையொட்டி துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : சுருக்கமாகக் கேட்கிறேன். தலைவர் அவர்கள் கடைக்கண்ணுடன் பார்க்கவேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன. ஆகவே அதை மாற்றியமைத்து ஒவ்வொரு எல்லைக்குள்ளும்

இவ்வளவு கோர்ட்கள் என்று நிர்ணயித்து, கோர்ட்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு வடாற்காடு மாவட்டத்தில் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது.

திரு. சோ. அழகர்சாமி: இந்தக் கேள்வி வேலூர் பற்றியது. திரு. இராமசாமி அவர்கள் துணைக் கேள்வி கேட்கிறார்கள். வேறு ஒரு உறுப்பினர் கேட்டபோது மறுக்கப்பட்டு, இப்போது இவரை அனுமதிக்கிறீர்கள். தலைவர் அவர்கள், அன்புக்குரியவர்கள் அன்பிலாதவர்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அது வாசுதேவநல்லூர் பகுதியில் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு பற்றியது. இந்தக் கேள்வி வேலூரில் கூடுதல் கோர்ட்கள் அமைப்பது பற்றியது. ஆகவே அந்த மாவட்ட உறுப்பினர்களுக்கு அதுபற்றிக் கேட்க உரிமை இருக்கிறது. கோர்ட் என்பது எல்லா மக்களுக்கும் பயன் படக் கூடியது. திரு. இராமசாமி அவர்களும் அந்தக் கோர்ட்டுக்குப் போகலாம். ஆகவே வாசுதேவநல்லூர் பற்றியும் இதற்கும் சம்பந்தப்படுத்திப் பேசுவது சரியல்ல.

THE HON. THIRU K. NARAYANASWAMY : The supplementary question put by the Hon. Member Thiru S. J. Ramaswami is not germane to the main question.

THIRU R. MARGABANDHU : The previous question which I put related to reduction of pendency. So, only in that way I put the question. But the Hon. Law Minister state that it did not arise. I would like to know whether the question regarding reduction of pendency of cases will not relate to the main question.

THE HON. THIRU K. NARAYANASWAMY: My answer is in respect of the constitution of second additional Court for reduction of the arrears in that area, and not beyond that area.

1979 மார்ச் 8]

திரு. இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது. திரு. அழகர்சாமி ஏதாவது புதிதாகச் சொல்லப் போகிறாரோ என்று சொல்லச் சொன்னேன்.

திரு. இரா. தாமரைக்கனி : இது என்ன காமன்வெல்த் சபையா? இவர் ஆங்கிலத்தில் பேசுகிறார், அமைச்சர் அவர்களும் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். நாம் என்ன லண்டனிலா இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு மொழிகளையும் பயன்படுத்தலாம் என்று விதி இருக்கிறது. ஆங்கிலத்திலும் பேசலாம் ஆகவே அதைக் கட்டுப்படுத்த எனக்கு அதிகாரம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : இதில் தவறு இருப்பதாகக் கருதவில்லை. ஆனால் என்னைப் போன்றவர்கள், ஆங்கிலம் தெரியாதவர்கள் அறிந்துகொள்கிற அளவிற்கு ஆங்கிலத்தில் பேசக்கூடிய கேள்விகள் பதில்கள் போன்றவற்றை தமிழில் மொழிபெயர்த்து உடனடியாக அளிக்கக்கூடிய முறையில் பாராளுமன்றத்தில் இந்தியில் பேசினால் அதை மொழிபெயர்த்து தமிழில் தரவேண்டும் என்று இருப்பதைப்போல் நாம் எல்லோரும் சேர்ந்து கேட்பதுபோல் அப்படிப்பட்டதொரு ஏற்பாட்டினை இங்கு செய்ய மாண்புமிகு தலைவர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. புதிதாக வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்பதற்கும், இங்கு ஆங்கிலத்தில் பேசுவதை அனுமதிக்கக்கூடாது என்று சொல்வதற்கும் வேறுபாடு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் முன்பே சொல்லியிருக்கிறார்கள். தமிழில் சொல்வதைவிட ஆங்கிலத்தில் சொன்னால் தான் முறையாக அமைகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா. : என்னைப்போன்ற ஆங்கிலம் தெரியாதவர்களின் நலனைக் கருதியாவது தமிழில் பேசக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் உணருகிறேன், ஆனால் அவைத் தலைவர் என்ற முறையில் நான் வேறு எதையும் செய்ய இயலாது.

திரு. நா. சுந்தரராஜ்: அமைச்சர் ஆங்கிலத்தில் சொல்வதை அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர் தமிழில் மொழி பெயர்த்து சொல்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர்கள் விருப்பம், தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. ப. சந்திரன் எழுந்து நின்றார்.......)

நீங்கள் இப்படி எழுந்து நின்றுகொண்டே இருந்தால் உங்களை அழைக்கமுடியாது, இப்படி அவைத் தலைவரை நீங்கள் கட்டாயப்படுத்தக் கூடாது. திரு. திருவேங்கடம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வேலூரில் இன்னும் ஒரு சப் கோர்ட் அமைக்கப்போவதாகத் தெரிகிறது. வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது. ஆதலால் ஒரே இடத்தில் கோர்ட்டுகளை அமைக்காமல் பரவலாக அமைக்கின்ற விதத்தில் இன்னொரு இடத்தில் இந்த கோர்ட்டை அமைக்கக்கூடாதா? வழக்கறிஞர்களுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி ஒரே இடத்தில் அமைக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: This is a general question and it needs no answer. The Second Additional Sub-Court at Vellore was established by reason of the fact that the High Court has recommended such a proposal.

திரு. ப. சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் போன்ற பல சட்டமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் களாக பணியாற்றித்தான் பிழைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலையில் செய்யாற்றில்-இதுவும் வட ஆற்காடுமாவட்டத்தில் தான் இருக்கிறது.—இங்கு ஒரு சிவில் கோர்ட் இயங்கி வருகிறது. இதை மாற்றி விடுவதற்கான முயற்சி எடுத்துவருவதாக கேள்வி யுறுகிறோம். அது உண்மைதானா? அப்படியென்றால் அங்குள்ள பொதுமக்களின் நலனை கருதி அதை மாற்றாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அடுத்து போளூரில் ஒரு 'ஒன் மேன்' கோர்ட் அமைப்பதற்கு..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போளூர் விஷயம் வேறு, வேலூர் கோர்ட் தான் இப்போது கேள்வியில் உள்ளது. இதைப் பற்றி மட்டும் கேள்வியை கேளுங்கள். வேறு கேள்விகளுக்குப் போகாதீர்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The hon. Member may please put a separate question

1979 மார்ச் 8]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தளவில், இரண்டு சப் கோர்ட்கள்தான் இருக்கின்றன. வழக்குகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே குடியாத்தத்தில் - இது ஆந்திரா பார்டரில் இருக்கிறது. நான்கு லட்சம் மக்கள் கொண்ட இடமாக இருக்கிறது. வேலூருக்கு இங்குள்ள மக்கள் வர வேண்டுமென்றால் 80, 40 மைல் வர வேண்டியிருக்கிறது. ஆகவே குடியாத்தத்தில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேலூர் கோர்ட்டை குடியாத்தத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்கிறீர்களா? என்ன கேட்கின்றீர்கள். சுருக்கமாக கேள்வியை கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சில முக்கியமான கேள்விகள் வரும் நேரத்தில் தான் நான் எழுந்திருக்கிறேன். அதற்குகூட அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அனுமதித்துதான் நேரம் எல்லாம் வீணாகிவிடுகிறது. நீங்கள் கேட்பதற்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. கேட்பதை சுருக்கமாக கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்; முக்கியமான கேள்வி வரும் போதுதான் கையை உயர்த்துவேன், அப்படிச் செய்தாலும் குற்றம், எழுந்தாலும் குற்றம் என்று சொன்னால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : குடியாத்தம் ஆந்திரா பார்டரில் இருக்கிறது. அங்கிருந்து முனிசீப் கோர்ட்க்கு வரவேண்டுமென்றால் திருப்பத்தூருக்கோ அல்லது வேலூருக்கோ தான் வர வேண்டும். குடியாத்தத்திற்கு கோர்ட் தேவையா என்பது பற்றி பரிசீலிக்க ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அதில் குடியாத்தத்தில் கோர்ட் அமைக்கவேண்டும் என்றுசொல்லப்பட்டிருக்கிறது மேலும் அங்கு ஒரு சப் கோர்ட் அமைக்க வேண்டும் என்று இரண்டு முறை சட்ட அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டிருக்கிறேன். எழுதியும் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்னும் அது அமைக்கப்படவில்லை. ஆனால், என்ன நடக்கிறது என்றால், பார் அசோஷியேஷன் என்ன சொல்லுகிறதோ அதை மட்டும் எடுத்துக் கொண்டு, டவுனிலேயே தான் இருக்க வேண்டும். சிட்டியிலேயே தான் இருக்க வேண்டும். வழக்கறிஞர்கள் தாங்கள் நகரத்திலேயே தான் வாழ வேண்டும் என்று கருதி சொல்வதை - வழக்கறிஞர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளுக்கு செவி சாய்க்காமல் உடனடியாக குடியாத்தத்தில் ஒரு சப்-கோர்ட் அமைக்க..

திரு. துரை முத்துசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர் .. ..

(திரு. ரா. மார்க்கபந்து எழுந்திருந்தார்..)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறருடைய மனதைப் புண்படுத்துகின்ற அளவிலோ அல்லது பிறருடைய தொழிலை புண்படுத்துகின்ற அளவிலோ கேள்விகள் அமையக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: எல்லோரையும் நான் பொதுவாக சேர்த்துச் சொல்லவில்லை. சிலரை மட்டும் தான் சொல்லுகிறேன். ஆகவே குடியாத்தத்தில் ஒரு முனிசீப் கோர்ட்டோ அல்லது சப்-கோர்ட்டோ ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் பேசும்போது பார் அசோசியேஷன் பற்றியும், வழக்கறிஞர்களைப் பற்றியும் மனம் புண்படும்படியாக குற்றச் சாட்டாகக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தைகளை நீக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அதை நீக்கவே கூடாது நடைமுறையிலே இல்லை என்று சொல்லட்டும். பார் அசோசியேஷனிலே கேட்டுத்தான் அவர்கள் சொல்கிறபடி நடத்தப் படுகிறதா, இல்லையா என்பதைச் சொல்லட்டும். ஆகவே, இதை நீக்கவே கூடாது. நான் எல்லோரையும் அப்படிச் சொல்லவில்லை; பொதுப்படையாக ஒருசிலரைப் பற்றித்தான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு இல்லை என்று சொல்லட்டும். திரு. மார்க்கபந்து அவர்களும் அவ்வாறு இல்லை என்று சொல்லட்டும். நான் பார் அசோசியேஷனிலே உள்ள வழக்கறிஞர்களைப் பார்த்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, வழக் கறிஞர்களைச் சொல்வதைப் பற்றித்தான் நான் ஆட்சே பிக்கிறேன்; ஆனால் குடியாத்தத்திலே வைத்துக் கொள் வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, the differences between the hon. Member, Thiru V. K. Kothandaraman and Thiru R. Margabandu may be settled between both of them. While appreciating the difficulties described by the hon. Member and while thanking the hon. Member Thiru Kothandaraman for meeting me twice in the matter, I still matinain that this supplementary does not flow from the main question.